| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 05.05.2026 | |
| CC No. 86/2023 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திருமதி. முத்துமாரி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. முத்து | தொழில் : பூக்கட்டி விற்பனை |
| கிராமம் : துவரங்குறிச்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 40/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள்தான் என்னை அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலத்தை நான் எழுதி கொடுத்தேன். 08.02.2020 அன்று மாலை 03.00 மணியளவில் சென்டிரிங் பலகை அடித்து எங்கள் வீட்டு வேலை நடந்து வந்தததது. அப்போது அசாக்குமார், பாக்கியலெட்சுமி, ராஜேஸ்வரி அங்கு வந்து பிரச்சனை செய்து வீடு கட்டுவதற்காக அடித்து வைத்திருந்த சென்டிரிங் பலகைகளை பிரித்து போட்டதுடன் பாதையை அடைத்துவிட்டனர். 09.02.2020 அன்று காலை நான் எனது வீட்டு அருகே பாத்திரம் கழுவி கொண்டிருந்தபோது எனது வீட்டுக்காரர் அங்கு நின்றுகொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து சென்டிரிங் பலகையை எடுத்து என்னை அடித்தார்கள். அசாக்குமார் என்னை சென்டிரிங்க பலகையால் தாக்கியதில் எனது இடது கண்ணில் இரத்தக்காயம் ஏற்பட்டது. மற்றொரு எதிரி தனலெட்சுமியும் என்னை தாக்கியதில் உடல்வலி ஏற்பட்டது. எதிரிகள் எனது கணவரை பிடித்து தள்ளி பணியனை கிழித்துவிட்டார்கள். அதில் அவருக்கு உடல்வலி ஏற்பட்டு முதுகில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. காயமடைந்த நாங்கள் துவரங்குறிச்சி காவல்நிலையம் சென்று தகவல் சொன்னோம். அங்கியிருந்து ஆட்டோ மூலம் போலீசார் எங்களை துவரங்குறிச்சி மருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். மேற்படி மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். பின்னிட்டு

மேல் சிகிச்சைக்காகக மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் துவரங்குறிச்சி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து போது போலீசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். எனது கணவர் முத்து த/பெ ஆறுமுகம், துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். பிரச்சனைக்கு பின்னிட்டு அங்கு இருக்கமுடியாததால் மனக்கஷ்டத்தால் குடும்பத்தோடு கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறோம். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 5 தையல் போட்டார்கள். **நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 05.05.2026 | |
| CC No. 86/2023 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திருமதி. வாசுகி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ராமசாமி | தொழில் : இல்லத்தரசி |
| கிராமம் : துவரங்குறிச்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 37/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-------------------------------------------------------------

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 முத்துமாரியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இருவரும் எனக்கு உறவினர்கள்தான். 08.02.2020 அன்று மாலை 03.00 மணியளவில் சென்டிரிங் பலகை அடித்து முத்துமாரி என்பவரின் வீட்டிற்கு வேலை நடந்து வந்ததது. அங்கு கொத்தனார் வேலை பார்த்து இருந்தார்கள். அப்போது சீனாதேவி, அவரது தங்கை சுஜீ, சின்னப்பாக்கியம் உள்ளிட்டோர் அங்கு வந்து பிரச்சனை செய்து வீடு கட்டுவதற்காக அடித்து வைத்திருந்த சென்டிரிங் பலகைகளை பிரித்து போட்டதுடன் பாதையை மறித்துவிட்டார்கள். 09.02.2020 அன்று காலை முத்துமாரி வீட்டு அருகே பாத்திரம் கழுவி கொண்டிருந்தபோது நான் அங்கு இருந்தேன். அங்கு முத்துமாரி வீட்டுக்காரரர் முத்து அங்கு நின்றுகொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து சென்டிரிங் பலகையை எடுத்து அடித்தார்கள். அசாக்குமார் முத்துமாரியை சென்டிரிங்க பலகையால் தாக்கியதில் அவருக்கு இடது கண்ணில் இரத்தக்காயம் ஏற்பட்டது. மற்றொரு எதிரி தனலெட்சுமியும் முத்துவை பிடித்து தள்ளி பணியணை கிழித்துவிட்டார்கள். அதில் அவருக்கு உடல்வலி ஏற்பட்டு முதுகில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. காயமடைந்த முத்துமாரியை அவர் துவரங்குறிச்சி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார். அங்கியிருந்து ஆட்டோ மூலம் போலீசார் அவர்களை துவரங்குறிச்சி மருத்துவமனை அனுப்பிவைத்தாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.